786.

இலாஹி.

பிஸ்மில்லா ஹலா நீயத்துசுல்த்தான் அப்துல்காதர்

முகையதீன் துணை.

பிரான்மலை

யாகூமஸ்தான் அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

மயிலாடும் சித்தர் பாடல்.

முதற்பாகம்.

மதுரை, பட்டரைக்காரத்தெரு

எம். காதர்பாக்ஷா ராவுத்தர்

அவர்களால்

மதுரை:

செண்ட்ரல் மார்க்கட் தெரு

மனோன்மணி விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

stered Copy Right.

O-,1MYM,M
N30.
186237

786

இலாஹி.

பிரான்மலை

யாகூ மஸ்தானவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

மயிலாடும் சித்தர் பாடல்

முதற்பாகம்.

மதுரை, பட்டரைக்காரத்தெரு

எம். காதர்பாக்ஷா ராவுத்தர்

அவர்களால்

மதுரை சென்ட்ரல் மார்க்கட் தெரு,

மனோன்மணி விலாசம் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

ரிஜிஸ்டர் காபிரைட்.

பிஸ்மில்லா ஹலா நீயகத்துசுல்த்தான் அப்துல்காதர்
முகையதீன் துணை.

15 OCT 1930

மயிலாடும்சித்தர்பாடல்

விருத்தம்.

திருவினி லுருவு மாகி ஜெகத்தினி லுதித்து வந்த
செய்யது ரசூல்நபி முகம்மது பாதம் போற்றி.
கருவினி லுருவுமாகிக் ககனத்தில் பறக்கும் பச்சி[போற்றி
மயில்தனைப் பிடித்து ஆட்டும் முகையதீன்கண்மலரைப்

ஷை

சித்தனுட திறமைதனை ஜெகத்தினி லெடுத் துரைக்க
சிந்தைமகிழ்ந்து கேட்போரெல்லாம் அகத்தினில் மகிழ்ச்சிபொ
அறந்தனை வளர்க்கு மிப்போ அருமையே அருமையென் . [ங்கி
றருளினேன் யாகூமஸ்தான் காப்புத்தானே.

பாட்டு.

தெளிந்து தெளிந்துநின் றாடுமயிலே நபி
சீர்பாதங் கண்டோமென் றாடுமயிலே
ஆடுமயிலே மனந்தேடுமயிலே நம்
ஹாலமுகம்மது பாதந்தனைக்கண்டு தெளிந்தாடுமயிலே
உவருக்கடலிலே மண்ணையெடுத்து
ஊறும்புனலிலே உண்டை சேர்த்து
அப்புஜலத்தினி லாணாய் வந்து
ஹாலமுகம்மது பாதந்தனைக்கண்டு தெளிந்தாடுமயிலே.
ஆசைக்கடலிலே றெக்கைவிரித்து
அகண்டவெளியிலே காலைநீட்டி
குருவிருக்கும் பீடம்போலே கும்பமாகி யிந்தக்
கூட்டைக்கொண்டு வந்தோமென் றாடுமயிலே.
கருணைக்கடலிலே மடுவைவைத்து
கண்ணனூர் வயலிலே தண்ணீர் பாய்ச்சி
குன்குதாத் தென்ற வித்தைப்பாவி பயிர்
குமுறியெழுந் தோமென் றாடுமயிலே.
அஷ்டகிரி பர்வதத்தைப் பந்தாடுவோம்

•

அகண்டபர வெளியிலே கிடைமறிப்போம்
கட்டுப்படா மணலையுங் கயிருக்குவோம் எங்கள்
காதரொலி நாதர்பாதங்கண்டு தெளிந்தாடுமயிலே.
எந்தவுயிர் தன்னிலேயும் போயுமிருப்போம்
இரவிலேசூரியனை யிங்குகாட்டுவோம்
கட்டுப்படா வாசியையுங் கட்டிமறிப்போம்
காலனையுங் கடந்திங்குவந்தோமென் றாடுமயிலே.
வஞ்சகத்தை நெஞ்சகத்தில் வராமல்செய்வோம் எங்கள்
வள்ளல்நபி பாதந்தன்னைக் கெஞ்சிடச்செய்வோம்
தஞ்சமென்றே பெரியோரைச் சார்ந்துமிருப்போம்
சாஸ்திரத்தை எடுத்திங்குவந்தோமென் றாடுமயிலே.
பரவெளியில் மயிலையிங்கே பார்த்தாட்டுவோம்
பஞ்சவர்ண அஞ்சையுங் கொஞ்சிடச்செய்வோம்
வெஞ்சினத்தை அஞ்சிடாமல் வேரறுப்போம் [மயிலே.
வேந்தர்அப்துல் காதரொலிநாதர்பாதங் கண்டுதெளிந்தாடு
கட்டப்பனை தன்னிலேயுங் கள்ளுவடிப்போம்
கண்மூக்கு மத்தியிலே கரந்துகுடிப்போம்
அஷ்டமா சித்துமிங்கே ஆடிவருவோம்
ஆலமுகம்மது பாதந்தனைக்கண்டு தெளிந்தாடுமயிலே.
எக்கின் மரத்தில்நின்று மயிலாட்டுவோம்
ஏகப்பங்காளரொடு இணங்கியிருப்போம்
ஹக்கனை மனக்கண்ணால் அறிந்திடுவோம்
ஆலத்திலே யின்சானைப்போல் நின்றாடுமயிலே.
ஹக்கன் திருவருள்பெற்று மயிலாட்டுவோம்
ஆனந்தவெள்ளத்தில் மூழ்கியாடிவருவோம்
பாவபுண்ய மிரண்டையும் பந்தாடுவோம் இங்கு
பரவெளியில் நின்றுஇங்கு ஆடுமயிலே.
வேசியர்கள் ஆசைதனை வேரறப்போம்
வெற்றிக்கொடி கட்டியிங்கு வேதம்படிப்போம்
தானென்ற அகங்காரத்தைத் தனித்திடுவோம்
தன்னகரிற் சித்திபெற்றுஎன் றாடுமயிலே.
மானத்தையும் வில்லாக வளைத்திடுவோம்
மறைநான்கு வேதந்தனை யெடுத்தாட்டுவோம்
தொட்டதெல்லாம் செம்பொன்னாகத் துலங்கச்செய்வோம்

தூயமகமூதுபாதம் துடர்ந்துநின் றாடுமயிலே.
வாசிக்குதிரைதனி லேறிவருவோம்
வஞ்சகரைக் கண்டாலிங்கு நெஞ்சைத் தனிப்போம்
பஞ்சமாபாதகத்தைப் பறந்திடச்செய்வோம்
பாலர்முகையதீன் நாவிலருள்பெற்றோமென் றாடுமயிலே.
வெள்ளானைமீதிலேறி மயிலாட்டுவோம்
வேந்தன்வந்து பணிந்தாலும் விருதளிப்போம்
சொல்லவொண்ணாப் பொருளையும் சொல்லிப் படிப்போம்
சூஸ்திரத்தைப் பார்த்துநின்று ஆடுமயிலே.
கதிரவன் முன்னில்நின்று மயிலாட்டுவோம்
காரணக் காமில்பாதங் கருத்தில்நாட்டுவோம்
ஐம்பத்தோ ரட்சரத்தை யறிந்துசொல்வோம்
ஆரணப்பொருளை நன்றாய் ஆய்ந்தோமென் றாடுமயிலே.
பச்சைமுத்துப்பளபளென மயிலாட்டுவோம்
பாலர்முகையதீன் பாதம்பணிந்து போற்றுவோம்
அச்சமில்லாக் கூட்டினிலே மயிலடைப்போம்
ஆலமுகம்மது பாதந்தனைக்கண்டு தெளிந்தாடுமயிலே.
கோடையிடிபோலவொரு நொடிநொடிப்போம்
கொற்றவனு மஞ்சிடவே சத்தம்போடுவோம்
வேணபொருள் வாங்கியிங்கே போற்றிவாழ்த்துவோம்
வெஞ்சினத்தை யஞ்சிடச் செய்வோமென் றாடுமயிலே
பொல்லாத மாய்கைதனைப் போக்கிடச்செய்வோம்[வோம்
பொன்னொளிபோல் தன்மனதைப் பொருந்திடச்செய்
வேதியர்கள் சொன்னநூலை மெய்யாகச்செய்வோம்
வேதாந்த மெய்ப்பொருளை விளங்கச்செய்வோமென்றாடு
மயிலே.
பொல்லாத ஆசைதனைப் போக்கிடச்செய்வோம்
புத்தியிலே யுத்திதன்னைப் பொருந்திடச்செய்வோம்
வெற்றிக்கொடி பிடித்தெங்கும் வீதிவருவோம்
வேதவாளெடுத் தேந்திவிளை யாடுமயிலே.
பூரணத்தைப் பொருந்தஇங்கே போதனைசெய்வோம்
பொன்னொளிபோல் மண்ணையெல்லாம் பொன்னாகச்செய்
தன்னுக்குள் தாத்தான தலமறிவோம் [வோம்
சாதனையில் சிபத்தோடு சார்ந்துநின் றாடுமயிலே.

186237

ஆதிவஸ்தை யறிவிஞ லறிந்துதெரிந்துரைப்போம்
ஐயனென்னும் கடலிலே முத்துமெடுப்போம்
நீதியுள்ள மன்னர்களை நேசம்பண்ணுவோம்
நெஞ்சினுள் ளிருளகற்றி நேரில்நிற்போமென் ருடுமயிலே.
நூனுக்குள் நூனுன நுட்பமறிவோம்
நொடியினி லண்டமெல்லாம் நோக்கிவருவோம்
தத்துவங்கள் தொன்னூற்ருறுந் தானேயறிவோம்
சர்தார்முகிய்யி தீனேச்சார்ந்துநின் ருடுமயிலே.
பரப்,பிரம்ம சொரூபத்திலே மயிலாட்டுவோம்
பச்சைறெக்கை பளபளெனப் பறந்துவருவோம்
அச்சமில்லாக் கூட்டிலிங்கே மயிலடைப்போம்
ஆலமுகம்மது பாதந்தனே யாகூமஸ்தான்கண்டாடுமயிலே.

விருத்தம்.

எத்தனேயோ குற்றந்தான் எதிர்த்துநின்று சீராடிசெய்தாலும்
ஹக்கனே நீபொறுப்ப தல்லாமல் அகிலத்தில் வேறுமுண்டோ
தன்னுக்குள் தானுகி தளிர்த்துநிற்குந் தயாபரப் பொருளே
கண்ணுக்குள் மணியாய்த் தோன்றி காரணம்நிறைந்துவோங்கு
ஷேக்கப்துல் காதரொலி நாதர்யாகூமஸ்தானுங்காப்புத்தானே.

பதங்கள்.

இராகம்-அபுரூபம் தாளம் சாப்பு.

கண்ணிகள்.

அலியை அறிவது பருலம்மா அதற்
கப்பாலொன்றுமே யில்லம்மா
தெளிவுதருமிது நேரம்மா இதைத்
தெரிசிப்போர்க்கருள் கூரம்மா (அலி)

ஆலமடங்கலும் அலிபுக்குள்ளே அதற்
கப்பாலொன்றுமே கூவுக்குள்ளே
ஜோதிமுகம்மது லாமுக்குள்ளே
தலங்கும் குத்தூகசாலி மீமதம்மா. (அலி)

அஞ்சுமா றுமுன்னெஞ்சில் நினைப்பதுஆரம்மா
அல்ஹம்தாயெங்கும் நிறைந்திருப்பதைப்பாரம்மா
வஞ்சகமில்லாத பருலஞ்சையும் வணங்கம்மா
வல்லோன் திருநபி சொன்னகலிமாவை
மகிழ்ந்திங்கேநீ கேளம்மா (அலி)

வாதுசெய்வது சூதம்மா
வருகும்வழியதைப் பாரம்மா
தீதுநலமிங்கே யேதம்மா இதைத்
தெரிசிப்போர்க் கருள்கூரம்மா. (அலி)

பெருமைதங்கிய மலையம்மா இங்கே
பேசாதிருப்பது சபூரம்மா
அருமைதங்கிய பொருளம்மா இது
யாகூ. மஸ்தானருளம்மா. (அலி)

இராகம்-தன்யாசி- தாளம்-ஆதி.

பல்லவி.

பரமானந்தம் பாரும் கண்ணே பயகாம்பர்நபி
பவனிவருகிறுர்கள் முன்னே

அநுபல்லவி.

சாஸ்திரவேதம் சகலமும்போற்ற
சர்வபரிபூர்ணம் ஆனந்தங்கொண்டாடிட (பர)

சரணம்.

வானோர் நீனோர் மறியம் ஆயிசாவும்
வல்லோன் திருநபியை உல்லாசமாகக்கூடி (பர)

கோடையிடிகள்போல் மேளமுழங்கவும்
கொற்றவனருள்பெற்றோர் கொக்கரிகொட்டவும்
மிக்கபுகழான மின்னல்கள் ஜொலிக்கவும்
மோலோர்கள் வாயினில் தீன்தீன்முழங்கவும் (பர)

கொடியுடன் ஜெண்டாக்கள் கோடியாய்வருகுது
கோமான் நபிமுன்னே இடிபோல்முழங்குது
எங்கும்புகழ்ந்துதீன் தீனென்ற இறைச்சலுமாகுது
இறையோன் திருநபிமுன் ஒளிவுமின்றிலங்குது (பர)

யானைகுதிரை ஒட்டை சேனைதளத்துடனே
அதிர்ந்திடபூமிவானம் குமுறிடவருகுது
அன்பர்கள்நடினப் பெண்களுமாடிட
ஆனந்தமறைகளும் அனுதினம்பாடிட (பர

ஓதினஉலமாக்கல் நீதியாய் ஆமீன்கூற
ஜோதிமுகமதைத் துறவோர்கள்போற்றிட
வாதிஇபுலீஸவன் வஞ்சகம்பறந்தோட
வல்லோன்திருநபியை வாழ்த்திக்கொண்டாடிட (பர)

அரசுகுருசுகலம் யாவுமேபுகழ்ந்திட
ஆலநபிபாதத்தை அனுதினந்தேடிட
கண்ணாடிபோலமுகம் கருத்தினில் துலங்கிட
காலனுமேபயந்து கலங்கியேயோடிட (பர)

பஞ்சமாபாதகங்கள் பறந்துமேயோடிட
பாவலர்கள்புகழ்ந்து பரமானந்தம்பாடிட
தஞ்சமென்றேகுரு நாதரைத்தேடிட
தனக்குத்துணையான நபிபாதம்நாடிட (பர)

முத்துநவரத்தினம் முகப்பினில் துலங்கவும்
முகியித்தீன் திருவருள் எங்குமின்றிலங்கவும்
இகபரமிரண்டிலு மீடேற்றம்பெருகவும்
இறையோன்தனைவணங்கும் யாகூ மஸ்தான்

அருள் துலங்கவும். (பர)

குறிப்பு.

இப்புத்தகத்தின் தலைப்பில் பாட்டிற்குக் கீழ் இங்கு அச்சிட்டிருக்கும் பல்லவி அநுபல்லவியை இசைத்து வாசித்துக்கொள்க

பல்லவி.

தெளிந்து தெளிந்து மனம் நாடுமயிலே நபி
சீர்பாதம் கண்டோமென்று பாடுகுயிலே

அநுபல்லவி

பாடுகுயிலே மனந் தேடுமயிலே நம்மைப்
படைத்தபிரான் தன்னைப் பார்த்துநின்று பாடுகுயிலே